DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

Calender    Case No. CC . 182/2018
Miscellaneous
Preliminary Register
Sessions
Deposition of Witness for    Prosecution Pw 3

Name    பாண்டி
Father / Husband Name    வெள்ளையன்
Village
Taluk    சிவகங்கை
Caste
Calling
Religion
Age

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 22nd August 2022.

---

முதல் விசாரணை:-

1) நான் சிவகங்கை அண்ணாமலைநகரில் குடியிருந்து வருகின்றேன். நான் தற்சமயம் காளையார்கோவிலில் உள்ள டாஸ்மாக்கில் விற்பனையாளராக வேலை செய்து வருகின்றேன். நான் ரோஸ்நகரில் உள்ள டாஸ்மாக்கில் வேலை செய்த சமயம் 04.06.2018 ம் தேதியன்று இரவு 10.15 மணியைப்போல் கடையை முடித்துவிட்டு அ.சா. 1 எங்களுக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்றார். அவருக்கு பின்னால் நானும், நாகராஜ், பழனி என்பவரும் தனித்தனி இருசக்கரவாகனத்தில் சென்றோம். மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த போது அ.சா. 1 ன் மீது பொடியை யாரோ அடித்துவிட்டார்கள்.

2) ஸ்கூட்டியைப் போன்று ஒரு வண்டியில் மூன்று நபர்கள் சென்றார்கள். அவர்கள் தான் அ.சா.1 ன் மீது பொடியை அடித்தார்கள். அவர் கண் தெரியவில்லை என அலறியவுடன் பின்னால் வந்த நாங்கள் அவரின் அருகில் சென்று பார்த்தோம். கண் விழிக்க முடியாமல் அ.சா.1 இருந்தார். அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. **2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).** அந்த

ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாக தான் தயார் செய்தார்கள். யார் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. **3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). என் முன்பாக எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

---

<u>Hostile</u> (அரசு தரப்பில் இந்த சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன் படி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1) கடந்த 11.06.2018ம் தேதி 15.00 மணிக்கு நான் மற்றும் அ.சா.2 என்பவர் முன்னிலையில் எதிரி சஞ்சீவ் குமார் தானாக முன்வந்து சிவகங்கை நகர் காவல் நிலைய ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நான் 2வதாக சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும் எங்கள் முன்பாக அத்தாட்சியில் உள்ள வாகனம் கைப்பற்றப்பட்டு என்றும் தற்சயம் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) நான் சம்பவ நேரத்தில் டாஸ்மாக்கில் விற்பனையாளராக பணிபுரிந்தேன். சம்பவம் எப்போது எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 04.06.2018 அன்று இரவு 10.15 மணிக்கு நடந்தது. அந்த சமயத்தில் மேம்பாலத்தில் வாகனங்கள் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். நானும், ஜெயபாலும் 50 மீட்டர் தொலைவில் சென்று கொண்டிருந்தோம். நான் ஜெயபாலுக்கு அருகில் சென்ற போது தான் சம்பவம் நடந்ததா என்றால் ஆமாம் வண்டியை நிறுத்தியவுடன் தான் அருகில் சென்று பார்த்தோம். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். வண்டியில் யார் வந்தார்கள் என்றோ, அந்த வண்டியை பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எதிரியை பார்த்து சத்தம் எதுவும் போட்டேனா என்றால் இல்லை.

2) காவல் நிலையத்தில் புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் சம்பவம் நடந்த இரவே 11.00 - 12.00 மணியிருக்கும் புகார் கொடுத்தோம். அந்த புகார் யாரிடம் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த புகாரை யார் எழுதினார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எங்கள் முன்னிலையில் யாரையும்

கைது செய்து, வாகனத்தை கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

3) நான் சொல்வது போல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை நான் அரசு ஊழியர் என்பதால் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. ஜெயபால் கொடுத்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லும் தினம் புகார் கொடுக்கவில்லை போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகள் மீது பொய் வழக்கு போடுவதற்காக 11.06.2018 தேதியன்று பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) என்னிடம் எந்த போலிசார் வாக்குமூலம் பெற்று சென்றார்கள் என்றால் சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் இருந்து விசாரித்தார்கள் எந்த அலுவலர் என்று தெரியவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கு வைத்து எந்த தேதியில் கையெழுத்து செய்தேன் என்றால் தெரியாது. அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். என் முன்பாக எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். அத்தாட்சி எங்கு வைத்து யார் தயார் செய்தார்கள் என்ற விவரமும் தெரியாது என்றால் சரிதான். என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்ற வில்லை என்றால் சரிதான்.

**(ஓம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 22.08.2022**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.